1972 மார்ச் 22]

நீராக ஓடிக் கொண்டிருப்பதாகச் சொல்கிருர்கள். அது சம்மந்த மாக இனியாவது ஒரு நிபுணர் குழு ஏற்படுத்தி, இதை ஆராய்ச்சி செய்து, அந்த நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே சொன்னேன் பாலாற்றின் கீழ் அதன் சக்திக்கு மீறிய பாசன வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற நிலைமை இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது நிலநீர் ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்த பிறகு அவர்கள் கொடுத் .திருக்கிற அறிக்கையின் அடிப்படையில் நிலநீரை பாதுகாக்க வேண் டிய பொறுப்பு இருக்கிற காரணத்திஞல், இதுபோன்ற தடைகள் விதிக்கப்பட ஏதுவாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற அறிக்கை யின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருக்கிற காரணத்திஞல், மேற்கொண்டு குழு நியமிப்பதற்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

Agricultural Production Plans.

* 307 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Ministry of Agriculture has proposed to review the agricultural production plan of Tamil Nadu Government for 1970–71; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :(அ) ஆம்.

(இ) உணவு–வேளாண்மை சமுதாய வளர்ச்சி–கூட்டுறவு மத்திய அமைச்சகத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இம் மாநிலத்திற்கு வருகை தந்து 1970–71-ஆம் ஆண்டு வேளாண்மை உற்பத்தித் திட்டம் குறித்து மாநில அரசு அதிகாரிகளுடன் 1970 ஜூன் 10, 11, 12-ஆம் நாட்களில் விவாதம் நடத்தியது.

Training Course for Gardeners.

* 308 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any training course for gardeners has been given by the Agricultural Department in this State during 1971; and

(*b*) if so, the details thereof?

[1972 மார்ச் 22

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) சென்னை மாநகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தோட்டக்கலை மேம்பாட்டு—காய்கறி உற்பத்தித் திட்டத்தின் கீழ் தோட்டக்காரர்களுக்குப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

(இ) காய்கறித் தோட்டங்களையும், அழகு தரும் செடிகளைக் கொண்ட தோட்டங்களையும் சரியான முறையில் வைத்துப் பேணி வருவதற்காகப் பயிற்சியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி காலம் ஒரு திங்களாகும். பயிற்சி பெறும் ஒவ்வொரு அணியிலும் 20 பேர்கள் அடங்கியிருப்பர். 1971–72-ம் ஆண்டில் ஆறு அணியினருக்குப் பயிற்சியளிக்கப்படும். இடை நிகழ் செலவுகளைச் சரிக் கட்ட பயிற்சிபெறும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 பயிற்சி உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி படிப் படியாக எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, வெளியிடங்களில் உள்ளவர்கள் ஏற்கனவே வேளாண்மைத் துறையில் நல்ல பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள இடங்களிலும் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

திரு. துரை. கோவிந்தராசன் : தலைவரவர்களே, தோட்டப் பயிற்சிப் பெறுவதற்கு ஆள் எடுக்கும்போது என்ன தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அதற்கான தகுதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பெண் தோட்டக்காரர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுமா? ஒரே ஒரு மாதத்தில் முழுப் பயிற்சியும் பெற்றுவிட முடியுமா? மேலும் பயிற்சி காலத்தை நீடிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1972 மார்ச் 22]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, வேளாண்மைத் துறையில் திறமைப் பெற்றவர்களுக்கு ஒரு திங்கள் பயிற்சி பெற்றால் போதும் என்று சொல்லப்படுகிறது. பெண்களையும் சேர்த்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளி எங்கெங்கே இருக்கிறது என்பதையும், தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டும் கிடைக்காததால் இத்தகைய பயிற்சிப் பள்ளிகளை அங்கே கொண்டு வர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பற்றி நான் புதிதாகத் திட்டம் எதுவும் போடவில்லை. தஞ்சையில் இருக்கக்கூடியவர்கள் இப்படிப்பட்ட காய்கறி பயிரிடுவதில் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, நகரப் பகுதிகளில்தான் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, in our State in places like Ooty, Hosur and other places English vegetables are grown very well and people are not in a position to understand the diseases affecting these plants and are not able to give effective treatment. May I know from the Hon. Minister whether it would be people to extend such schemes where there are English Vegetables grown in our State?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்போது வீட்டிலே வேலை செய்கிற தோட்டக்காரர்களுக்கு வேளாண்மைப் பயிற்சி நேரத்தில், வீட்டுக்கே ஆள் அனுப்பி சொல்லித்தரக்கூடிய திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இதுபற்றி யோசனை செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்தத் தோட்டக் காரர்கள் பயிற்சி பெற்ற இளைஞர்களை வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்துகின்ற வகையில் அவர்களைத் தோட்டக்காரர்கள் என்று

அழைப்பதற்குப் பதிலாக தோட்டக் கலைஞர்கள் என்று அழைத்தால், அவர்களும் வேளாண்மைப் பெருக்கத்தில் ஈடுபடுவார்கள். அதற்கான முயற்சியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப.. நாராயணசாமி : இதுபற்றி இப்போது பரிசீலிக்கப்படவில்லை. 50 ரூபாய் கொடுக்கின்ற ஸ்டைஃப் பென்ட் ஸ்கீமில் யார் வேண்டுமாளுலும் இந்தப் பயிற்சி பெறலாம்.

கரும்பு வகைகள்

*309 வின.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அதிக அளவு சர்க்கரைச் சத்து கொடுக்கக் கூடிய கரும்பு வகைகள் எவை?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: கீழ்க்கண்ட கரும்பு வகைகள் அதிக சர்க்கரை சத்துள்ள கரும்புவகைகள்:—

	நடும் பட்டம்.	கரும்பு வகைகள்.
1	முன்பட்டம்—டிசம்பர், ஜனவரி ..	கோ. 658, கோ. 449
2	இடைப்பட்டம்—பிப்ரவரி, மார்ச் ..	கோ. 419, கோ. 449, கோ. 740 மேலும் கோ. 658
3	பின்பட்டம்—எப்ரல், மே ..	கோ. 419, கோ. 853, கோ. 449 மேலும் கோ. 740
4	தனிப்பட்டம்—ஜூலை, செப்டம்பர்	கோ. 449, கோ, 658, கோ, 740 மேலும் கோ, 853

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட இந்தக் கரும்பு வகைகளை பல இடங்களில் பயிர் செய்ய முற்படுகிறார்கள். ஆகவே, எந்த எந்தப் பகுதியில் எந்த எந்த கரும்பு வகை அதிக சர்க்கரை சத்து கொடுக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை அறிந்து சொல்வதற்கு ஒரு நிபுணர் குழு அமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, சில கரும்பு வகைகளை சில இடங்களில் பயிரிட்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆராய்ச்சியின் முழுப் பயனும் தெரிந்த பின்னல் அது பற்றி முடிவு செய்யப்படும்.